# சிவசங்கரியின் நெருஞ்சிமுள் புதினம் காட்டும் மனித நேயம்

**ரூ. ரிஜோனா**
பதிவு எண்: 22112014022005
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம் அங்கீகாரம் பெற்றது
அபிஷேகப்பட்டி

**முனைவர் சு. விஜயாகலைவாணி**
நெறியாளர் & இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை & தமிழாய்வு மையம்
ஏ.பி.சி.மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6434

***ஆய்வுச் சுருக்கம்***

*பல வகைப்பட்ட உயிரினங்கள் உலகில் இருக்கின்றன. ஒவ்வொரு வகையினமும், ஒரே வகையான பழக்கவழக்கங்களைக் கொண்டிருக்கும். ஆறறிவு கொண்ட மனித இனத்தார் தங்களின் தேவையை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு ஒருவரையொருவர் சார்ந்தே வாழ்கின்றனர். இதனால் ஒருவருக்கொருவர் உதவிசெய்து வாழ்வது இன்றியமையாததாகி விடுகிறது. இவ்வாறு, மனிதன் மனித நேயத்துடன் இருப்பது அவசியமென்பதை ஒவ்வொரு கால கட்டத்திலும் சான்றோர் வலியுறுத்தி வந்திருக்கின்றனர். சிவசங்கரி “நெஞ்சிமுள்” புதினத்தில் பொதுநலம், மனிதநேயம், கல்விக்கு செய்யும் தொண்டுகள், மருத்துவதொண்டு, முதியோருக்கு செய்யும் தொண்டு, ஏழைக்களுக்குச் செய்யும் தொண்டு முதலியவற்றை இக்கட்டுரையில் காண்போம்.*

## முன்னுரை

மனிதநேயம் என்பது நிலவின் தேய்பிறை போல நாள்தோறும் தேய்ந்துக் கொண்டுதான் செல்கிறது. மனிதநேயம் மலர வேண்டும். தொண்டுகள், கடமைகள் ஆகியவற்றை மக்கள் உணர்ந்து கொள்ளும் படி நெருஞ்சிமுள் புதினத்தைப் படைத்துள்ளார் சிவசங்கரி. எல்லாவற்றையும் நொடிப்பொழுது பார்த்து மனதுக்குள் ஐயோ பாவம் என்று மட்டும் நினைத்துச் செல்கின்ற மனிதர்கள் மாற வேண்டும் என்பதை இப்புதினம் நமக்கு உணர்த்துகிறது. ஒவ்வொருவரும் பிறருக்காக வாழ வேண்டும் என்று எண்ண வேண்டும். அப்பொழுதான் தொண்டு செய்ய வழிபிறக்கும். துயருக்கு தடை பிறக்கும். மனிதனின் நல்ல பண்பிலிருந்து பிறக்கும் ஓர் இயல்பு தொண்டு செய்யும் மனப்பான்மையையும், உதவி செய்யும் மனப்பான்மையும் வளர்க்கும்.

### மனிதநேயம் விளக்கம்

மனிதனின் நேயம், மனிதனுக்குரிய நேயம் எனப்பொருள் கொள்ளலாம். மனிதன் நேயம் மனிதநேயம். மனிதன் - அன்பு, இரக்கம், நட்பு இவற்றுடன் நடந்து கொள்வது, உயிரினங்களுக்கிடையில் சிந்திக்கத் தெரிந்தவற்றை வெளிப்படுத்தி அறிவாற்றலுடன் நடந்து கொள்பவன் மனிதன். மனிதன் தனித்து வாழ்பவனுமல்ல, தனக்குரியதைத் தானாக நிறைவேற்ற முடிந்தவனுமல்ல. தனது உடை, உறை, உணவு இவற்றில் எல்லாவற்றிற்காகவும், பிறரைச் சார்ந்து இருக்கின்றான். இந்நிலையில் ஒருவருக்காக ஒருவர் இரக்கம் கொள்வது அவசியமாகிறது. அவ்விடத்தில் உதவுவது இயல்வு. துன்பத்திலிருக்கும் பிறருக்கு உதவ வேண்டுமென்பது மனிதர்களிடையே எதிர்பார்க்கப்படும் தலையாயபண்பு.

### பொதுநலம்

தன்னலம் கருதாது பிறர்நலம் பேணி வாழும் சுந்தரேசன் என்பவர் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டவர். ‘நாட்டில் சுதந்திரத்தீ ஹோஹோ என்று பற்றி ஜூவாலை விட்டபோது, அதன் வெப்பத்தால் இழுக்கப்பட்டு, ஆணானப்பட்ட காந்தி, நேரு போன்றவர்களே பாரிஸ்டர் தொழிலை விட்டுவிட்டு நாட்டுக்காக உழைக்கும் போது எனக்கு மட்டுமென்ன கேடு? என்று நினைத்தவர் பொட்டென்று ஒருநாள் வக்கீல் தொழிலுக்கு முழுக்குப் போட்டார். கதர் கட்டினார். அந்நியச் சாமான்களை எதிர்த்தார்”[1] (நெ.மு.நா.ப.17).

இவ்வாறு சுந்தரேசன் என்பவர் அந்நியர் ஆட்சியிலிருந்து நம்நாடு விடுதலைபெற வேண்டும். நாட்டுமக்கள் அனைவரும் நலமுடன் வாழ வேண்டும் என்று பொதுநல நோக்குடையவராகத் திகழ்ந்தார். அது மட்டுமல்லாது “தள்ளி நில்லேண்டா அந்தண்டை போயேண்டா என்று ஒதுக்கி வைத்த மனிதர்களுக்கு ஹரிஜன் என்ற நாம கரணத்தைச் சூட்டி, அவர்களும் நம் உடன் பிறப்புகளே என்று மகாத்மா அறிவித்ததன் பேரில் வேணாஞ்சாமி, எங்களைத் தொடாதீங்கசாமி என்று கூனிக்குறுகி விலகிய குப்பனையும்,முனியாண்டியையும் தோளொடு தோள் இணைத்து வீட்டுக்கு அழைத்து வந்து கூடத்தில் இலைபோடச் சொல்லி கிட்ட அமர்ந்து கவனித்துச் சாப்பாடு போட்டார்”[2] (நெ.மு.நா.ப.18). இவ்வாறு சுந்தரேசன் என்பவர் சுதந்திரப் போராட்டத்தியாகியாகவும், “அனைவரும் சமம்” என்ற கொள்கையை உடைய பொது நலத் தொண்டராகவும் சிவசங்கரியின் “நெருஞ்சிமுள்” நாவலில் நம் கண்முன் காட்சி அளிக்கின்றார்.

வள்ளுவர் இதனை,

> **“கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு**
> **என்ஆற்றங் கொல்லோ உலகு”[3]**
>
> **(கு.எ-211)**

> **“தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு**
> **வேளாண்மை செய்தற் பொருட்டு”[4]**
>
> **(கு.எ - 212)**

தகுதியாவனர்களுக்கு உதவி செய்வதற்காகவே பொதுநல விரும்பிகள் உழைத்துப் பொருள் சேர்க்கிறார்கள். இன்றைய காலக்கட்டத் தில் நாட்டில் பொதுநல உணர்வு அற்றுத் தன்னல உணர்வு மேலோங்கி இருப்பதை அறிந்த ஆசிரியர், “நெருஞ்சிமுள்” நாவலில் பொதுநல தொண்டு செய்யும் கதாபாத்திரத் தின் மூலம் பொதுநலம் குறித்த சிந்தனையை மக்களின் மனதிலே பசுமரத்தாணி போல பதியச் செய்துள்ளது.

### மனிதநேயம்

மனித உயிர்களிடம் இரக்கம், அனுதாபம், பரிவு காட்டுவது மனிதநேயம். “நெருஞ்சிமுள்” நாவலில் மனிதநேயம் கொண்டவளாக பூமா காணப்படுகின்றாள். பூமா ஒரு தனியார் பள்ளியில் வேலைப் பார்த்துக் கொண்டிருக்கும் போது மகனை இழந்து தனியாக தவிக்கும் தாயி என்னும் மூதாட்டியை தன் வீட்டிலேயே வைத்து அவளுக்கு அடைக்கலம் கொடுப்பவளாக

காணப்படுகின்றாள். "மனுஷங்க யாரும் இல்லாம தவிச்சிட்டிருந்த அனாதைய வீட்டுக்குக் கூட்டி வந்து பெத்ததாயாட்டம் நீ வச்சிருக்க"[5] (நெ.மு.ப.129) என்று தாயி என்னும் மூதாட்டி கூறுவதில் இருந்து பூமாவின் மனித நேயத்தினை அறியலாம். மருமகளால் கொடுமைப்படுத்தப்பட்டு இருந்த நவநீதா பாட்டியின் நிலைமையை பூமா காணசென்ற போது, சுகிழிசல் பாய், உடம்பில் பேருக்கு ஒரு புடவைத்துண்டு, பக்கத்தில் பெட்பேன், எச்சில் துப்ப மக்குக் கிண்ணம், அலுமினியத்தட்டு, டம்ளர், மண்பானையில் தண்ணீர் அருகில் ஓர் அலுமினிய குண்டானில் மோர்ச்சாதம். காகிதத்தில் காய்ந்த நார்த்தங்காய் துண்டுகள்."[6] (நெ.மு.ப.203). பூமா அந்த பாட்டிக்கு ஆறுதல் கூறினாள். இங்கு வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம், வாடினேன் என்ற வள்ளலாரின் பாடல் அடிகள் ஒப்ப நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது. பூமாவின் செயலில் இருந்து அவளின் மனிதத் தன்மைக் கொண்ட மனதினை ஆசிரியர் "நெருஞ்சிமுள்" புதினத்தின் புலப்படுத்துகிறார். இதனை,

"மனிதன் என்றால் இரக்கத்தன்மை வேண்டும். குற்றங்களைப் பொறுத்துக் கொள்ளும் குணம் வேண்டும். விட்டுக் கொடுக்கும் இணக்கம் வேண்டும். இவைகள் மனிதத்தன்மையுள்ளவர்களிடம் மாறாமல் அமைந்திருக்க வேண்டிய குணங்கள்"[7] என்று சாமி சிதம்பரனாரின் கூற்றுக்கு ஏற்ப பூமா மனிதநேயம் கொண்ட பெண்ணாக ஆசிரியர், பூமாவை சித்தரித்துள்ளார்.

**"இருப்பதில் கொடுப்பது பகிர்தலின் துவக்கம்**
**இருப்பதெல்லாம் கொடுப்பது பகிர்தலின் சிகரம்**
**இல்லாததைக் கூட கொடுக்கலாம் என்பது**
**பகிர்தலின் மகத்துவம்"[8]**

என்று இதழ் கட்டுரையாளர் சேவியர் குறிப்பிடுவது போல பூமாவினை ஆசிரியர் படைத்துள்ளார். இன்னோர்க்கு என்னாது என்னொடும் சூழாது வல்லாங்கு வாழ்ந்து என்னாதும் நீயும் எல்லார்க்கும் கொடுமதி மனக்கிழவோயே என்ற குமணவள்ளலின் வாக்கிற்கிணங்க பூமா தன்னுடைய மகிழ்ச்சி யை விட பிறரின் மகிழ்ச்சியை பெரிதென விரும்பினாள். இவ்வாறு நெருஞ்சிமுள் நாவலில் மனிதநேயம் கொண்டவளாக காணப்பட்டாள்.

**கல்விக்கு செய்யும் தொண்டு**

சிவசங்கரியின் "நெருஞ்சிமுள்" புதினத்தில் "அபயாசாரிடி" என்னும் மகளிர் சங்கத்தின் அங்கத்தினர்கள் ஏழை குழந்தைகள் படிப்பதற்கு உதவி செய்தனர். "நாங்கள் ஆரம்பித்திருக்கும் இன்னொருதிட்டம் இந்த "புக் பாங்க்" படிப்பை முடித்தவிட்ட குழந்தைகளின் புத்தகங்களைச் சேகரிப்பதோடு, இரண்டாயிரம் ரூபாயை இந்த புக் பாங்கிற்காக ஒதுக்கிப் புது புத்தகங்களை வாங்கி இருக்கிறோம். புத்தகங்கள் தேவைப் படும் ஏழை மாணவ மாணவிகள் இவற்றை இலவசமாக உபயோகித்து விட்டு ஆண்டின் இறுதியில் பத்திரமாகத் திருப்பித் தந்து விடலாம். புக் பாங்கில் இதுவரை முப்பத்து நாலு குழந்தைகள் மெம்பராகச் சேர்ந்திருக் கிறார்கள்"[9] (நெ.மு.ப.150) என்று பூமா "அபயாசாரிடி" என்னும் மகளிர் சங்கத்தின் கூட்டத்திற்கு தலைமைத் தாங்க வந்திருக்கும் பாரதி சிவலிங்கம் என்னும் பெண்ணிடம் கூறுவதில் இருந்து, கல்விக்கு தொண்டு செய்வதை அறியலாம். இதனை,

**"இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்**
**தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்**
**எம்மை உலகத்தும் யாங்காணேம் கவிப்போல்**
**மம்மர் அறுக்கும் மருந்து"[10]**

என்ற நாலடியார் பாடலுக்கு ஏற்ப கல்வியின் சிறப்பினையும், பயனையும் ஏழைக்குழந்தைகளுக்கு கிடைக்க வழி செய்தனர். கேடில் விழுச்செல்வமாகிய கல்வியின் பயன்கிட்டுமாறு செய்தனர். "அபயாசாரிடி" மகளிர் சங்கத்தின் அங்கத் தினர்கள் மாணவமாணவிகள் இலவசமாக புத்தகத்தைப் பெற்று படிக்கும் விதத்தில் புதிய திட்டத்தை ஆரம்பித்து கல்விச்சேவை

பல புரிந்ததாக கதாபாத்திரத்தினைப் படைத்துள்ளார் ஆசிரியர் சிவசங்கரி.

## மருத்துவ தொண்டு

சிவசங்கரியின் "நெருஞ்சிமுள்" புதினத்தில் வியாதியினால் பாதிக்கப்பட்டு மருத்துவம் செய்ய இயலாத ஏழைகளுக்கு மருத்துவம் செய்ய பூமா அமைத்த "அபயா சாரிடி" என்னும் மகளிர் சங்கம் பல்வேறு விதமாக உதவிகள் செய்தது.

"சுகுமாரன் போலியோவினால் பாதிக்கப் பட்ட எட்டுவயதுப் பிள்ளை. தந்தை கிடையாது. ஸ்டெனோவாக இருக்கும் தாய். உறவு என்று யாரும் இல்லாதவர்கள் செயற்கை கால் பொருத்தப்பட்டால் புத்திச ாலியான சுகுமாரன் பள்ளிக்குப் போய் படித்து வளமான வாழ்க்கை வாழ முயற்சி பண்ணலாம்"[11] (நெ.மு.ப.143) என்று மகளிர் சங்கத்தின் உறுப்பினரான சுமதி என்னும் பெண்ணின் வேண்டுகோளுக்கு இணங்க எழைப் பையனுக்கு செயற்கை கால் பொருத்த சங்கம் உதவி செய்தது.

மேலும்,

"கௌரிக்கு ஜி.எச்.லே. ஹார்ட் ஸர்ஜரி பண்ண ஒப்புக்கிட்டாங்க, ஆனா குறைந்த பட்சம் இரண்டாயிரமாவது என் கை விட்டுச் செலவாகும்னு தோணுது உங்க உதவியைத்தான் மலையா நம்பிக்கிட்டு இருக்கேன்"12 (நெ.மு.ப144) என்று கௌரி என்னும் பன்னிரண்டு வயது சிறுமியின் வேண்டுகோளினை எற்றுக் கொண்டு சங்கம் உதவி செய்தது. பிறருக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணத்துடன் மகளிர் சங்கத்தில் உள்ள அங்கத்தினர்கள் செயல்பட்ட முறையில் இருந்து, ஏழை மக்களுக்கு மருத்துவ தொண்டு செய்து உதவியதை சிவசங்கரி அவர்கள் தெளிவாக விளக்கிக் கூறுகிறார்.

இதனை,

"அன்பு ததும்பும் மனதுடன் நோயுற்றுக் கிடப்பவர்களின் அருகே சென்று மெதுவாக அவர்களின் கைகளைப் பற்றி பாருங்கள். உங்களின் உடலில் இருந்து ஒரு காந்த சக்தி அவர்களது உடலுக்கு புகுவதை நிச்சயமாக உணர முடியும். அன்பு ஒரு சக்தி, உலகில் சகல நோய்களையும் நீக்கக்கூடிய பேராற்றல் கொண்டது"[13] இவ்வாறு அன்னை தெரசா கூறியது போல நோயாளிகளின் மீது அன்பு செலுத்துதல், மருத்துவச் செலவுகள் போன்ற மருத்துவச் சேவைகளை மகளிர் சங்கத்தின் அங்கத்தினர்களோடு பூமா செய்து வந்தாள்.

## முதியோருக்குச் செய்யும் தொண்டு

நெருஞ்சிமுள் புதினத்தில் மகளிர் சங்கத்தின் உறுப்பினர்களின் முயற்சியால் கட்டப்பட்ட "சாந்திசதன்" என்னும் பெயரில் அமைந்த முதியோர் இல்லம் அனாதை முதியோர்களுக்கு ஆதரவுக் கொடுத்து தொண்டுகள் செய்தது. "ச்சீ நீ வேணாம்போ என்று பெற்ற குழந்தைகளாலும் மற்றவர்களாலும் விரட்டி அடிக்கப்பட்டு, தள்ளாத காலத்தில் நிம்மதி இல்லாமல் பாதுகாப்பு இல்லாமல் அடுத்த வேளை சாப்பாட்டுக்கு என்ன செய்வோம் என்ற பரிதவிப்போடு, உடம்புக்கு வந்து படுத்துவிட்டால் நமக்கு யார் என்ற பயத்தோடு அல்லர்டும் வயதானவர்களை இரண்டு கரத்தாலும் அணைத்து நாங்கள் இருக்கிறோம் உங்களுக்குஎன்று கனிவாக, பரிவாக இதமாகச் சொல்லக்கூடிய முதியோர் இல்லம்"[14] (நெ.மு.ப.165). சாந்திசதன் என்ற பெயரில் அமைந்த முதியோர் இல்லம் பெற்று வளர்த்தவர்களால், உற்றவர்களால் அனாதையாகக் கைவிடப்பட்டு அல்லல் உறும் பெண் முதியோர்களுக்கு ஆதரவுக் கொடுத்து முதியோர்க்களுக்குத் தேவையான வசதிகளையும் செய்து கொடுத்து உதவிகள் செய்தனர் சங்க உறுப்பினர்கள்.

**"அன்பு செய்தாருக்கு அன்பு - என்றால்**
**ஆனந்தம் அதிலென்ன உண்டு?**
**அன்பற்ற பேருக்கு அன்பு - செய்தால்**
**அதுவன்றோ மானிடப் பண்பு"[15]**

என்று இயேசுக் காவியத்தில் கண்ணதாசன் கூறுகின்றார். இவ்வாறு அன்புக்காக ஏங்கும் அனாதை முதியோர்களிடம் அன்பு செலுத்தி

ஆதரித்து, முதியோர் இல்லம் அனாதை முதியோர்களுக்கு ஆதரவுக் கொடுத்து தொண்டு செய்வதாக ஆசிரியர் கூறுகிறார்.

## பிறருக்கு உதவும் மனப்பான்மை

முதியோர் இல்லத்தில் உள்ள அம்மாக்களை நல்ல முறையில் கவனித்துக் கொள்ள திலகா என்னும் பெண் முன் வந்தாள். "நல்ல வேலையை விட்டுட்டு எங்ககிட்ட வேலைக்கு வர்ற அளவுக்கு எங்களால சம்பளம் கொடுக்க முடியாதே திலகா"[16] (நெ.மு.ப.215) என்று கேட்ட பூமாவிற்கு, திலகா சிரித்தபடி "எனக்கு சம்பளம் பெரிசில்லே நா ஒண்டிக்கட்டை கொடுக்கறதைக் கொடுங்க.. சந்தோஷமா வாங்கிக்கிறேன்"[17] (நெ.மு.ப.216) என்று பதில் கூறினாள். அம்மாக்களுக்கு சேவை செய்வது எனக்கு நிம்மதியை கொடுக்கும் என்று கூறி நடக்க முடியாமல் இருக்கும் முதியோர்களுக்கு சேவை செய்தாள்.

முதியோர் இல்லத்தில் அனாதையாக வந்து சேர்ந்த மீனாபாய் என்னும் பாட்டி "எல்லோர் உடம்புலேயும் சிவப்பு இரத்தம் தான் ஓடுது. எல்லாரும் வாயால சாப்பிட்டு மூக்காலத்தான் மூச்சு விடறோம். இதுவே அவங்க மட்டம் நாம உசத்தினு என்ன அம்புலும்மா? என்பார். சும்மா பிள்ளைங்களை நினைச்சே ஏங்கறதால என்ன லாபம் ஆச்சி? அவங்கதான் நம்மளை வேணாம்னு சொல்லிட்டாங்களே சரிப்பானு ஒதுங்கி நிக்க வேண்டியது தான் புத்திசாலித்தனம்'[18] (நெ.மு.ப.270) என்று முதியோர் இல்லத்தில் உள்ள அம்மாக்களுக்கு அறிவுரைகள் சொல்லியும், ஆறுதல் கூறியும் நல்ல குணங்களின் மூலம் இனிமையாக பேசுபவராக காணப்பட்டாள். இப்புதினத்தின் மூலம் ஆசிரியர் அவர்கள் பிறருக்கு உதவும் மனப்பான்மை மக்களிடம் தூண்டும் வண்ணம் அமைத்துள்ளார். "முடிந்தால் பத்துப்பேருக்கு உதவு, இல்லை என்றால் தெருவிலே போகும்போது கீழே கண்ணாடித் துண்டு கிடந்தால் அதை எடுத்துக் குப்பைத் தொட்டியில் போட்டு விட்டுப் போ உயர்ந்த இடம் கிடைக்கும் என்ற நோக்கத்தோடு சேவை செய்யாதே'[19] என்று கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுகின்றார். பிறருக்கு உதவி செய்து வாழும் ஒப்புரவைப்போல நல்லனவாகிய அறம் வேறு இல்லை என்பதை

**"புத்தேன் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே**
**ஒப்புரவின் நல்ல பிற"[20]**

***(கு.எ.213)***

என்று கூறியுள்ளார் திருவள்ளுவர். ஒப்புரவு என்பது ஒருவருக்கொருவர் உதவி செய்து வாழ்வது. ஒப்புரவிலிருந்தே பொதுநலம் பிறக்கிறது. மக்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் உதவிசெய்து மனித நேயத்துடன் வாழவேண்டும் என்பதை ஆசிரியர் இப்புதினத்தில் வலியுறுத்தியுள்ளார்.

## தொகுப்புரை

"நெருஞ்சிமுள்" புதினத்தில் பூமா தனக்கென வாழாமல் பிறர் நலனுக்காக வாழ்ந்தவள். அனைவரிடமும் அன்பாக பழகுபவள். சமூக சேவகி, பல்வேறு தொண்டுகளின் உறைவிடம். பிள்ளைகளால் கைவிடப்பட்ட பெண் முதியோர்களின் மறுவாழ்வுக்குத் தன்னை அர்பணித்துக் கொண்டவள். பூமா தமிழகத்தின் ஓர் அன்னை தெரஸா என்று புகழும்படி தனது வாழ்வை பிறருக்கு அன்பு செய்வதற்கு என்றே அர்பணித்துக் கொண்டு வாழ்ந்தவள். கல்வி, மருத்துவம் முதியவர்களுக்கு உதவி செய்தல் என பொதுநல காரியங்களை சீரும் சிறப்புமாக செய்தாள் என ஆசிரியர் கூறுகிறார்.

## முடிவுரை

இன்றைய காலக்கட்டத்தில் நாட்டில் பொதுநல உணர்வு அற்றுத் தன்னல உணர்வே மேலோங்கி இருக்கிறது. இதனால் தான் மனிதர்கள் பெரும் துன்பத்துக்கு உள்ளாகின்ற நிலையை நாம் காணமுடிகிறது. பிறருக்குச் சேவை செய்வதே, பிறவி எடுத்ததன் பயன் என்பார்கள். இந்திய நாட்டைப் பொறுத்தவரையில் சுயநலமும் இங்கேதான்

அதிகம். பொதுநலமும் இங்கேதான் அதிகம். இப்புதினத்தில் சுந்தரேசன் பொதுநலத் தொண்டனாகவும், பூமா சமூக சேவகியாகவும், கமலம் மருத்துவ தொண்டு செய்பவளாகவும், திலகா முதியோர்க்கு அன்பு கலந்த நெஞ்சோடு பணிபுரிபவளாகவும், மீனாபாய் கலங்கி வருத்தப்படும் அனாதை முதியோருக்கு ஆறுதல் கூறும் பண்புடையவளாக சித்தரித்து ஆசிரியர் கூறுகிறார். இப்புதினத்தின் வழி பிறருக்கு உதவி செய்து மனிதநேயத்துடன் வாழ வேண்டும் என்ற உணர்வினைத் தூண்டுவதாக அமைந்துள்ளது.

## அடிக்குறிப்பு

1. சிவசங்கரி நெருஞ்சிமுள், ப.எ-17, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை, எட்டாம் பதிப்பு, டிசம்பர், 2008.
2. மேலது, ப.எ - 18.
3. திருக்குறள் பரிமேலழகர் உரை, (ப.ஆ) எஸ். கொளமாரீஸ்வரி, கு.எ - 211, சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 2 3, ஸ்ரீ கிருஷ்ணா, எட்டாம் பதிப்பு, மார்ச் - 2007.
4. மேலது, கு.எ - 212.
5. சிவசங்கரி நெருஞ்சிமுள், ப.எ-129, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை, எட்டாம் பதிப்பு, டிசம்பர், 2008.
6. மேலது, ப.எ - 203.
7. எட்டுத்தொகையும், தமிழர்பண்பாடும், ப.எ-191, அறிவுப்பதிப்பகம், 142, ஜானி, ஜான்கான்ரோடு, இராயப்பேட்டை, சென்னை, முதல் பதிப்பு, மே - 1985.
8. தினதந்தி இளைஞர் மலர் (04.02.2012) ப.எ - 9.
9. சிவசங்கரி நெருஞ்சிமுள், ப.எ-150, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை, எட்டாம் பதிப்பு, டிசம்பர், 2008.
10. நாலடியார் மூலமும் உரையும், (உ.ஆ) எஸ்.கொளமாரீஸ்வரி, கு.எ - 211, சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 2 3, ஸ்ரீ கிருஷ்ணாபுரம் தெரு, முதல் பதிப்பு, ஆகஸட் - 2006.
11. சிவசங்கரி நெருஞ்சிமுள், ப.எ-143, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை, எட்டாம் பதிப்பு, டிசம்பர், 2008.
12. மேலது, ப.எ - 144.
13. அன்னை தெரசா (உ.ஆ), ப.எ - 74, அஜயன் பாலா விகடன் பிரசுரம், 757, அண்ணா சாலை, சென்னை, இரண்டாம் பதிப்பு, அக்டோபர் - 2009.
14. சிவசங்கரி நெருஞ்சிமுள், ப.எ-165, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை, எட்டாம் பதிப்பு, டிசம்பர், 2008.
15. கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியம், ப.எ - 102, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், பி.லிட், 41, பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.
16. சிவசங்கரி நெருஞ்சிமுள், ப.எ-215, கங்கை புத்தக நிலையம், 23, தீனதயாளு தெரு, தியாகராயநகர், சென்னை, எட்டாம் பதிப்பு, டிசம்பர், 2008.
17. மேலது, ப.எ - 216.
18. மேலது. பு.எ - 270.
19. கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியம், ப.எ - 17, நியூ செஞ்சுரிபுக் ஹவுஸ், பி.லிட், 41, பி.சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை, முதல் பதிப்பு, ஏப்ரல் - 2004.
20. திருக்குறள் பரிமேலழகர் உரை, (ப.ஆ) எஸ். கொளமாரீஸ்வரி, கு.எ - 213, சாரதா பதிப்பகம், ஜி - 4, சாந்தி அடுக்ககம், 2 3, ஸ்ரீ கிருஷ்ணா, எட்டாம் பதிப்பு, மார்ச் - 2007.